# தி நியூ இந்தியா அசூரன்ஸ் கம்பெனி லிமிடெட்

**பதிவு மற்றும் தலைமை அலுவலகம் : நியூ இந்தியா அசூரன்ஸ் பில்டிங், 87, எம்.ஜி. ரோடு, ∴போர்ட், மும்பை – 400 001**

---

## பெடல் சைக்கிள் வண்டி காப்பீடு

---

### பிரிவு I - இழப்பு அல்லது சேதம்

இங்குள்ள அட்டவணையில் விளக்கப்பட்டபடி எந்தவொரு பெடல் சைக்கிளுக்கும் ஏற்படும் இழப்பு அல்லது சேதத்திற்காக (அதிலுள்ள துணைப்பொருட்கள் உட்பட) நிறுவனமானது, காப்பீடு செய்த நபருக்கு இழப்பீடு வழங்கும்.

(a) எதிர்பாராத வெளிப்புற வழிமுறைகளினால்

(b) நெருப்பு, வெளிப்புற வெடிப்பு அல்லது மின்னல் அல்லது கொள்ளை, வீட்டின் பூட்டை உடைத்து திருடுதல், திருட்டு, எதிர்பாராத வெளிப்புற வழிமுறைகள் அல்லது தீயநோக்குடைய செயல்பாட்டால்

இப்பிரிவின் கீழ், கீழ்கண்டவற்றிற்கு எந்தவொரு தொகையையும் வழங்குவதற்கு நிறுவனத்திற்கு கடப்பாடு இல்லை:

(a) பயன்பாட்டின் காரணமாக தேய்மானம், இழப்பு, மதிப்புக்குறைவு, பொறியியல் சார்ந்த செயல்நிறுத்தம் / பழுது அல்லது அளவுக்கு மீறிய சுமையினால் விளைகின்ற சேதம் அல்லது அழுத்தம் அல்லது பெடல் சைக்கிளும், அதே வேளையில் திருடப்பட்டிருந்தாலொழிய திருட்டு அல்லது கொள்ளை அல்லது வீட்டை உடைத்து திருடுதல் ஆகியவற்றால் துணைப்பொருட்களுக்கு ஏற்பட்ட சேதம்

(b) அதே நேரத்தில் பெடல் சைக்கிளும் திருடப்பட்டிருந்தால் அல்லது சேதப்படுத்தப்பட்டிருந்தாலொழிய டயர்கள் இழப்பு அல்லது டயர்களுக்கு சேதம். இந்நேர்வில் மாற்றுப்பொருளின் விலையில் 50% வரை மட்டுமே நிறுவனத்தின் கடப்பாடு பொறுப்பு அமைந்திருக்கும்.

(c) வெளிப்புற வழிமுறைகள் அல்லது தீயநோக்குடைய செயல்பாட்டால் ஏற்படுகின்ற இழப்பு அல்லது சேதத்திற்கான கேட்புரிம கோரிக்கையின்போது வழங்கப்படுகின்ற எந்த தொகையிலும் முதல் 25 ரூபாய்

### பிரிவு II - மூன்றாவது நபர்களுக்கான கடப்பாடு

1. இதிலுள்ள அட்டவணையில் குறிப்பிட்டுள்ள கடப்பாடு வரம்புக்கு உட்பட்டு, கீழ்கண்ட நிகழ்வுகளுக்காக காப்பீடு செய்த நபர் சட்டப்படி பணம் வழங்க பொறுப்புடையவராகும் பட்சத்தில் கேட்புரிமை கோருபவரின் செலவுகள் மற்றும் செலவீனங்கள் உட்பட, அனைத்து தொகைக்கும் நிறுவனமானது, இழப்பீடு தொகையை வழங்கும்.

   இதிலுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள எந்தவொரு பெடல் சைக்கிளினால் அல்லது அதன் வழியாக அல்லது அதன் தொடர்பினால் அல்லது அதை ஏற்றுவது அல்லது அதில் சுமை ஏற்றுவது அல்லது இறக்குவது ஆகியவற்றால் விளைந்த விபத்து நேர்வின்போது

   (i) எந்தவொரு நபரின் உயிரிழப்பு அல்லது உடல் ரீதியான காயம்

(ii) சொத்துக்கு சேதம்

2. இப்பிரிவின் நோக்கங்களுக்காகவும் மற்றும் வரையறைகளுக்காகவும் மற்றும் அதன் வரம்புகளுக்கு உட்பட்டும், காப்பீடு செய்த நபரின் ஆணையின் கீழ் அல்லது அவரது அனுமதியின் பேரில் பெடல் சைக்கிளை ஓட்டுகின்ற எந்த நபரையும் அவர்தான் காப்பீடு செய்த நபர் என்றே நிறுவனம் கருதும். ஆனால், கீழ்கண்ட நிபந்தனைகளுக்கு அது உட்பட்டதாகும்.

(a) வேறு எந்த பாலிசியின் கீழும் இழப்பீடு பெற அத்தகைய நபர் உரிமையுள்ளவராக இருக்கக்கூடாது.

(b) அத்தகைய நபர், அவர்தான் காப்பீடு செய்யப்பட்ட நபரைப்போலவே பொருந்துகின்ற வகையில் இந்த பாலிசியின் வரையறைகள், நிபந்தனைகள் மற்றும் விலக்குகளுக்கு உட்பட்டு, அவற்றை ஏற்று பின்பற்றவேண்டும்.

(c) காப்பீடு செய்த நபர் மற்றும் இத்தகைய வேறு நபர் ஆகிய இருவருக்கும் எதிராக தீர்ப்பு வழங்கப்படும் நேர்வின்போது, நிறுவனம் வழங்கவேண்டிய எந்தவொரு இழப்பீட்டுத்தொகை விஷயத்தில் காப்பீடு செய்த நபர் அவரது கடப்பாடு வரம்பிற்கேற்ப முன்னுரிமைப் பெற உரித்தானவராவார்.

3. இப்பிரிவின் கீழ் இழப்பீட்டைப் பெற உரிமையுள்ள நபர் ஒருவரின் உயிரிழப்பு நேர்வின்போது, அத்தகைய நபருக்கு ஏற்பட்டிருக்கின்ற கடப்பாட்டைப் பொறுத்தவரை, நிறுவனமானது அவரது தனிப்பட்ட பிரதிநிதிகளுக்கும் இழப்பீட்டு பொறுப்புறுதியை ஏற்கும் அத்தகைய நனிப்பட்ட பிரதிநிதிகள், அவர்கள்தான் காப்பீடு செய்யப்பட்ட நபர்கள் என்பதைப்போலவே, பொருந்துகின்ற வரை இப்பிரிவின் அம்சங்களை பின்பற்றி, பூர்த்தி செய்யவேண்டும் மற்றும் இப்பாலிசியின் வரையறைகள், நிபந்தனைகள் மற்றும் விலக்குகளுக்கு உட்பட்டு இது அமையும்.

4. அதன் எழுத்துப்பூர்வமான ஒப்புதலோடு ஏற்பட்ட அனைத்து செலவுகள் மற்றும் செலவீனங்களுக்கு நிறுவனம் பணம் செலுத்தும்

5. நிறுவனமானது, அதன் விருப்பத்தேர்வின் பேரில் (a) இப்பிரிவின் கீழ், இழப்பீட்டிற்குரிய விஷயமாக வரக்கூடிய எந்த இறப்பு குறித்த மரண விசாரணையின் போது பிரதிநிதி கலந்துகொள்ள ஏற்பாடு செய்யும் மற்றும் (b) இப்பிரிவின் கீழ், இழப்பீட்டிற்குரிய விஷயமாக வரக்கூடியவாறு விளைவிக்கின்ற எந்தவொரு செயல் அல்லது குற்றம் அல்லது எந்தவொரு நிகழ்வோடு தொடர்புடைய வழக்கு விசாரணையில் எந்தவொரு சட்ட நீதிமன்றத்தில் பிரதிவாதி தரப்பாக செயல்படுவது. இப்பிரிவின் கீழ், கீழ்வரும் நேர்வுகள் மற்றும் விஷயங்களில் நிறுவனம் எந்தவொரு தொகையையும் வழங்க பொறுப்புள்ளதாக இருக்காது என்பதன் அடிப்படையில் இது அமையும்.

a) (i) பெடல் சைக்கிளில் சுமை ஏற்றுவதற்காக சுமையை கொண்டு வருவது தொடர்பாக

(ii) பெடல் சைக்கிளின் ஓட்டுநர் அல்லாத வேறு எந்த நபராலாவது, அதிலிருந்து சுமை இறக்கிய பிறகு, பெடல் சைக்கிளிலிருந்து சுமையை எடுத்துச்செல்வது தொடர்பாக பாதை அல்லது வழி ஆகியவற்றின் எல்லைகளைத் தாண்டி எழுகின்ற அல்லது விளைந்த சேதம் அல்லது உயிரிழப்பிற்கான காயம்

b) காப்பீடு செய்யப்பட்டவரின் அல்லது ஓட்டுநரின் இல்லத்தைச் சேர்ந்த ஏதாவதொரு உறுப்பினருக்கு அல்லது காப்பீடு செய்யப்பட்ட நபரிடம் அல்லது ஓட்டுனரிடம் பணிபுரிகின்ற எந்தவொரு நபருக்காவது அத்தகையதொரு பணியாற்றும்போது அல்லது அதன் வழியாக விளையக்கூடிய உயிரிழப்பு அல்லது உடல்ரீதியான காயம்

c) பெடல் சைக்கிளை ஓட்டுகின்ற அல்லது அதன் மீது ஏறுகின்ற அல்லது இறங்குகின்ற எந்த நபருக்கும் ஏற்படும் உயிரிழப்பு அல்லது உடல்ரீதியான காயம்.

d) பெடல் சைக்கிளில் கொண்டு செல்லும்போது, காப்பீடு செய்யப்பட்டவர் அல்லது ஓட்டுநர் அல்லது அவர்களிடம் நம்பிக்கையின் பேரில் வைத்திருந்த அல்லது காப்பீடு செய்யப்பட்டவர் அல்லது ஓட்டுநரின் குடும்பத்தைச் சேர்ந்த ஒரு உறுப்பினருக்கு சொந்தமான சொத்துக்கு ஏற்படும் சேதம்.

e) அத்தகையதொரு ஒப்பந்தம் ஏதும் இல்லாதபோதும் கூட காப்பீடு செய்யப்பட்ட நபர் அல்லது ஓட்டுநருக்கு வந்து சேர்ந்திருக்கக்கூடிய அத்தகையதொரு கடப்பாடு இருந்தாலொழிய, காப்பீடு செய்யப்பட்ட நபர் அல்லது ஓட்டுநரால் ஒப்பந்தத்தின் பேரில் ஏற்றுக்கொள்ளப்பட்ட எந்தவொரு கடப்பாடு

## பொது விதிவிலக்குகள்

இந்த பாலியின் கீழ், கீழ்கண்டவற்றிற்கு கம்பெனி கடப்பாடு அல்லது பொறுப்பைக் கொண்டிருக்காது:-

(a) (i) இதனுடன் இணைக்கப்பட்டுள்ள அட்டவணையில் குறிப்பிட்டுள்ள நோக்கங்கள் அல்லாத பிறவற்றிற்காக

(ii) வாடகைக்கு அல்லது ஆதாய பரிசிற்காக

(iii) இந்தியாவிற்கு வெளியே

இத்தகைய பெடல் சைக்கிள் பயன்படுத்தப்படும்போது, அத்தகைய பெடல் சைக்கிள் தொடர்பாக அல்லது வழியாக அல்லது அதனால் ஏற்பட்ட எந்தவொரு விபத்து, காயம், இழப்பு, சேதம் அல்லது கடன் பொறுப்பு

(b) வெள்ளம், சூறாவளி, புயல், எரிமலை சீற்றம், நிலநடுக்கம் அல்லது இயற்கையின் வேறு எந்த பேரழிவு, போர், ஆக்ரமிப்பு, விரோதிகளின் நடவடிக்கைகள், சச்சரவுகள், சண்டைகள் அல்லது போர் போன்ற நடவடிக்கைகள் (போர் அறிவிக்கப்பட்டாலும் அல்லது இல்லையென்றாலும்) உள்நாட்டுப்போர், வேலைநிறுத்தம், கலவரம், பொதுக்கிளர்ச்சி, பயங்கரவாதம் மற்றும் நாசவேலை, கலகம், புரட்சி, இராணுவப்புரட்சி அல்லது மேற்கூறப்பட்ட நிகழ்வுகளின் நேரடியான அல்லது மறைமுகமான விளைவுகளால் மற்றும் காப்பீடு செய்யப்பட்டவர் அல்லது வேறு எந்த நபராவது காப்பீடு செய்யப்பட்ட நபருக்குத் தெரிந்து மற்றும் அவரின் ஒப்புதலோடு போதை விளைவிக்கும் மதுபானம் அல்லது போதைப்பொருட்களின் தாக்கத்தின் கீழ், பெடல் சைக்கிளை எந்த நபராவது ஓட்டும்போது ஏற்படுகின்ற எந்தவொரு விபத்துக்காயம், இழப்பு, நேரடியான அல்லது மறைமுகமான சேதம் அல்லது கடப்பாடு மற்றும் இதன் கீழ் செய்யப்படும் எந்தவொரு உரிமைகோரிக்கை நேர்வின்போது, காப்பீடு செய்யப்பட்ட நபர், இந்த விபத்து, சேதம், இழப்பு மற்றும் அல்லது கடப்பாடு பொறுப்பு ஆகியவை, மேற்கூறப்பட்ட நிகழ்வுகளினால் மற்றும் அதன் விளைவுகளின் காரணமாக அல்லது அதன் பங்களிப்பினால் எந்த வகையிலும் தொடர்பேதுமின்றி, தனிப்பட்ட முறையில் சுதந்திரமாக உருவானவை என்று நிரூபிக்க வேண்டும். அத்தகைய நிரூபனம் செய்ய

தவறும் பட்சத்தில் அத்தகைய உரிமக் கோரிக்கைக்காக எந்தவொரு இழப்பீட்டுத் தொகையையும் வழங்க நிறுவனம் பொறுப்பு அல்லது கடப்பாடைக் கொண்டிருக்காது.

(c) (i) ஆதாரம் எதுவாக இருப்பினும், அதிலிருந்து வெளியாகும் அயனாக்கி கதிர்வீச்சு அல்லது கதிர்வீச்சு செயல்பாட்டினால் பாதிப்பு அல்லது ஆபத்து அல்லது இதன் காரணமாக விளைந்த அல்லது அதனால் பங்களிப்பு செய்யப்பட்ட எந்தவொரு விபத்து அல்லது இழப்பு அல்லது சொத்து எதுவாக இருப்பினும் அதற்கு ஏற்பட்ட சேதம் அல்லது அழிவு அல்லது அதன் காரணமாக எழுகின்ற அல்லது விளைகின்ற எந்தவொரு நஷ்டம் அல்லது செலவுகள்

(ii) தன்மை / இயல்பு எதுவாக இருப்பினும் எந்தவொரு சட்டப்பூர்வ கடப்பாடு / பொறுப்பு

(iii) அல்லது மேற்கூறப்பட்ட நேர்வுகளினால் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ விளைந்த உயிரிழப்பிற்கான காயம் மற்றும் காப்பீடு செய்யப்பட்ட நபருக்கு திறனிழப்பு ஆகியவற்றின் காரணமாக, வழங்கப்படுகின்ற இழப்பீட்டுத் தொகை

(d) அணுஆயுத மூலப்பொருட்கள் / பொருட்களினால் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ விளைந்த அல்லது பங்களிப்பு செய்யப்பட்ட அல்லது அவற்றினால் உருவாகின்ற எந்தவொரு விபத்து இழப்பு, அழிவு, சேதம் அல்லது சட்டப்பூர்வ கடப்பாடு / பொறுப்பு

**நிபந்தனைகள்**

1. இந்த பாலிசியும் மற்றும் இந்த அட்டவணையும் ஒருங்கிணைந்து ஒரு ஒப்பந்தமாகவே கருதப்படும். இப்பாலிசி அல்லது அட்டவணையின் எந்தவொரு பகுதியிலும் குறிப்பிட்ட அர்த்தத்தை இணைத்துள்ள எந்த ஒரு வார்த்தை அல்லது சொற்றொடர் எங்கெங்கு இடம்பெற்றாலும், அதே பொருள் / அர்த்தத்தையே கொண்டிருக்கும்.

2. எந்தவொரு விபத்து அல்லது இழப்பு அல்லது சேதம் நிகழ்ந்த உடனேயேயும் மற்றும் உரிமக்கோரிக்கை நேர்வின்போதும் நிறுவனத்திற்கு எழுத்துப்பூர்வமாக தரப்படவேண்டும் மற்றும் அதன்பிறகு நிறுவனத்திற்கு தேவைப்படுகின்ற அனைத்து தகவல் மற்றும் உதவியினை காப்பீடு செய்தவர் வழங்கவேண்டும்.

3. காப்பீடு செய்தவருக்கு இது தொடர்பாக வருகின்ற ஒவ்வொரு கடிதம், உரிமக் கோரிக்கை தொடர்பான சம்மன்கள் மற்றும் அல்லது நடைமுறைகள் கிடைத்த உடனேயே நிறுவனத்திற்கு அனுப்பப்படுதல் வேண்டும். இப்பாலிசியின் கீழ், ஒரு உரிமக் கோரிக்கை எழுவதற்கு காரணமாக உள்ள எந்த நிகழ்விற்காக, பிரேதப் பரிசோதனை விசாரணை அல்லது உயிரிழப்பிற்கான விசாரணை நடைபெறுவது குறித்து காப்பீடு செய்தவருக்கு தகவல் கிடைத்தவுடன், உடனடியாக அதை எழுத்துப்பூர்வமாக நிறுவனத்திற்கு வழங்கப்படல் வேண்டும். இப்பாலிசியின் கீழ் ஒரு உரிமக்கோரிக்கைக்கு வழிவகுக்கின்ற திருட்டு அல்லது வேறு எந்த குற்ற நடவடிக்கை நேர்வின்போது இது குறித்து காப்பீடு செய்பவர் காவல்துறைக்கு உடனடியாக தகவல் தெரிவிக்க வேண்டும் மற்றும் குற்றமிழைத்தவருக்கு தண்டனையை வாங்கித்தருவதில் நிறுவனத்தோடு ஒத்துழைக்க வேண்டும்.

4. நிறுவனத்தின் எழுத்துப்பூர்வமான ஒப்புதலின்றி காப்பீடு செய்யப்பட்ட நபரால் அல்லது அவரது சார்பாக எந்தவொரு ஒப்புக்கொள்ளுதலோ / பணம் தருவதற்கான வாக்குறுதியோ / ஆஃபரோ அல்லது இழப்பீட்டிற்கான ஈட்டுறுதியோ தரக்கூடாது. காப்பீடு செய்த நபரின் பெயரில் பிரதிவாதியாக செயல்படவோ அல்லது உரிமக்கோரிக்கைக்கு தீர்வு செய்யவோ அல்லது காப்பீடு செய்த நபரின் பெயரில் சேதம் அல்லது ஈட்டுறுதிக்கான எந்தவொரு உரிமக் கோரிக்கையிலும் தனது சொந்த நலனிற்காக வழக்குத்தொடரவும், வழக்கு விசாரணையை மேற்கொள்வதில் முழு விருப்ப உரிமையையும் அல்லது எந்தவொரு உரிமக்கோரிக்கைக்கான தீர்வை தீர்மானிப்பதில்

முழு உரிமையும் நிறுவனத்திற்கு உண்டு. நிறுவனத்திற்கு தேவைப்படக்கூடிய இது தொடர்பான அனைத்து தகவல் மற்றும் உதவியினை காப்பீடு செய்த நபர் வழங்கவேண்டும்.

5. இப்பாலிசியின் பிரிவு II – ன் கீழ், உரிமக்கோரிக்கை உருவாக வழிவகுக்கின்ற நிகழ்வு நடைபெற்றதற்கு பிறகு எந்த நேரத்திலும், இப்பிரிவின் கீழ் நிறுவனத்தின் கடப்பாட்டிற்கான முழுத் தொகையையும், ஏற்கனவே இழப்பீடாக வழங்கிய தொகை அல்லது தொகைகளை பிடித்தம் செய்தபிறகு காப்பீடு செய்த நபருக்கு நிறுவனம் வழங்கலாம் அல்லது எந்தவொரு உரிமக்கோரிக்கை அல்லது உரிமக்கோரிக்கைகளுக்கான தீர்வின்படி குறைவான தொகையினை வழங்கலாம் மற்றும் அவ்வாறு வழங்கியதன் பேரில் நிறுவனமானது, எந்தவொரு பிரதிவாத தீர்வு மற்றும் நீதிமன்ற நடவடிக்கைகளை நடத்துவது மற்றும் அதன் மீதான கட்டுப்பாட்டை நிறுவனமானது, கைவிட்டுவிடும் மற்றும் அத்தகைய கோரிக்கை அல்லது கோரிக்கைகள் தொடர்பாக இந்த பாலிசியின் கீழ் எந்தவொரு கூடுதல் கடப்பாடு பொறுப்பினையும் கொண்டிருக்காது. இத்தகைய தொகை வழங்கிய தேதிக்கு முன்பாக, இது தொடர்பான விஷயங்களில் வழக்குத் தொடர்பாக, திரும்ப பெறத்தக்க அல்லது ஏற்பட்ட செலவுகள் மற்றும் செலவீனங்கள் இதற்கு விதிவிலக்காகும். இத்தகைய நடவடிக்கையை நிறுவனமானது, தனது பொறுப்பிலிருந்து கைவிடுவதன் விளைவாக காப்பீடு செய்த நபருக்கு ஏற்பட்டதாக கூறப்படும் எந்தவொரு நஷ்டம் அல்லது சேதாரத்திற்கு நிறுவனம் பொறுப்பேற்காது.

6. நிறுவனமானது, அதன் சொந்த விருப்பத்தேர்வின் பேரில் பெடல் சைக்கிளை ரிப்பேர் செய்யலாம், மாற்றிக் கொடுக்கலாம் அல்லது அதன் பகுதி ஒன்றை அல்லது அதன் துணை உபகரணங்களை மாற்றிக்கொடுக்கலாம் அல்லது இழப்பு அல்லது சேதத்திற்கான தொகையைப் பணமாக கொடுக்கலாம் மற்றும் இழக்கப்பட்ட அல்லது சேதமடைந்த பாகங்களின் உண்மையான மதிப்பு மற்றும் அதனுடன் சேர்த்து அதனை ஃபிட்டிங் செய்வதற்கான நியாயமான செலவீனத் தொகையைவிட நிறுவனத்தின் கடப்பாடு பொறுப்பானது, அதிகமாக இருக்காது. இழப்பு அல்லது சேதத்தின்போது பெடல் சைக்கிளின் மதிப்பு (அதிர்வுள்ள துணை உபகரணங்கள் உட்பட) அல்லது அட்டவணையில் குறிப்பிட்டுள்ளபடி, காப்பீடு செய்த நபரின் பெடல் சைக்கிளுக்கான மதிப்பீட்டுத் தொகை (அதில் உள்ள துணை உபகரணங்கள் உட்பட) ஆகிய இரண்டில் எது குறைவானதோ அதனை எந்த ஒரு நேர்விலும் நிறுவனம் வழங்கும் தொகை மீறாது.

7. காப்பீடு செய்த நபர் அவரது தனிப்பட்ட அல்லது பிற தகுதிவாய்ந்த நபரின் மேற்பார்வையின் கீழ் திறன் மற்றும் தகுதிவாய்ந்த ஓட்டுனரை மட்டுமே பணியிலமர்த்துவதற்கான அனைத்து முறையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் மற்றும் சைக்கிளானது, முறையாகப் பராமரிக்கப்பட்டு நல்ல நிலையில் இருப்பதை உறுதி செய்யவேண்டும்.

8. காப்பீடு செய்த நபரின் கடைசியாக அறியப்பட்ட முகவரிக்கு பதிவுதபால் மூலம் 7 நாட்கள் நோட்டிஸ் கொடுப்பதன் மூலம் நிறுவனமானது, இந்த பாலிசியை ரத்து செய்யலாம் அத்தகைய ஒரு நேர்வில், காலாவதியாகாத காப்பீடு கால அளவிற்கு ஏற்றாற்போல் பிரிமியத் தொகையின் விகிதாச்சாரப் பங்கை திரும்பப் பெறுவதற்கு காப்பீடு செய்த நபர் உரிமையுள்ளவராவார்.

9. இப்பாலிசியின் கீழ், ஏதாவது உரிமக் கோரிக்கை எழுகின்றபோது மற்றும் இழப்பு, சேதம் அல்லது கடப்பாடு உறுதி ஆகியவற்றிற்கு ஈடுசெய்கின்ற காப்பீடு வேறு ஏதேனும் அதற்கு இருக்குமானால், இழப்பு, சேதம் அல்லது செலவீனத்திற்கான இழப்பீட்டில் அதன் விகிதாச்சார அளவுக்கு அதிகமாக பணம் வழங்கவோ அல்லது பங்களிப்பு செய்யவோ நிறுவனம் பொறுப்புள்ளதாக இருக்காது. ஆனால், இதற்கு இப்பாலிசியின் பிரிவு II – ன் கீழ், இரண்டாவது பத்தியில் a) விதிமுறையின் கீழ், எந்தவொரு கடப்பாடு பொறுப்பையும் நிறுவனத்தின் மீது இந்நிபந்தனை சுமத்தாது மற்றும் இந்த நிபந்தனை இல்லையென்றால், இப்பொறுப்பிலிருந்து இந்நிறுவனம் விடுவிக்கப்பட்டிருக்கும் என்பதாக இருக்கவேண்டும்.

10. இப்பாலிசியின் கீழ் வழங்கப்பட வேண்டிய தொகையின் அளவு குறித்து ஏதேனும் சர்ச்சை அல்லது வேறுபாடு எழுமானால் (கடப்பாடு பொறுப்பு ஒப்புக்கொள்ளப்பட்டிருந்தாலொழிய) அத்தகைய வேறுபாடானது, பிற அனைத்து கேள்விகளையும் பொருட்படுத்தாது, இரு தரப்பினராலும் எழுத்துப்பூர்வமாக நியமிக்கப்படும் ஒரேயொரு நடுவரின் (மத்தியஸ்தரின்) முடிவிற்கு விடப்படும் அல்லது தனிநபர் மத்தியஸ்தர் குறித்து இரு தரப்பினரும் ஒப்புக்கொள்ளவில்லை என்றால், மத்தியஸ்தத்தைக் எந்தவொரு தரப்பாவது கோரிய நாளிலிருந்து 30 நாட்களுக்குள் அது மூன்று நபர்கள் அடங்கிய மத்தியஸ்த குழுவிடம் அனுப்பப்படவேண்டும். இக்குழுவில் இச்சர்ச்சை / வேறுபாடு உடைய தரப்பு ஒவ்வொன்றாலும் நியமனம் செய்யப்படும் ஒரு நபர் என இரு மத்தியஸ்தர்களும் மற்றும் இத்தகைய இரு மத்தியஸ்தர்களால் கலந்துபேசி நியமனம் செய்யப்படுகின்ற மூன்றாவது மத்தியஸ்தரும் அடங்குவர். இத்தகைய மத்தியஸ்தமானது, மத்தியஸ்தம் மற்றும் சமரச சட்டம் 1996 – விதிகளுக்கொப்ப மேற்கொள்ளப்படும்.

இந்த பாலிசி தொடர்பாக அல்லது இதன் கீழ் நிறுவனமானது கடப்பாடு பொறுப்பினை ஏற்றுக்கொள்ளவில்லை என்றால் அல்லது அது குறித்து சர்ச்சை எழுப்பினால், மேற்கூறப்பட்டபடி மத்தியஸ்தத்திற்கு எந்தவொரு வேறுபாடு அல்லது சர்ச்சையானது அனுப்பப்பட மாட்டாது என்பது தெளிவாக ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது அல்லது புரிந்துகொள்ளப்பட்டுள்ளது.

“இந்த பாலிசியின் மீது எந்தவொரு நடவடிக்கை அல்லது வழக்கு தொடர்வதற்கான எந்தவொரு உரிமைக்கும் முன்பாக, அத்தகைய மத்தியஸ்தர்கள் அல்லது இழப்பு அல்லது சேதத்திற்கான அளவு அல்லது தொகை என்பது மீது, நடுவர் வழங்கும் தீர்ப்பு அல்லது முடிவு முதலில் பெறப்பட வேண்டும் என்று இதன் வழியாக தெளிவாக குறிப்பிடப்படுகிறது மற்றும் அறிவிக்கப்படுகிறது”

இதன் கீழ் செய்யப்படும் எந்த கேட்புரிம கோரிக்கையில் காப்பீடு செய்யப்பட்டவருக்கு பொறுப்புறுதியை ஏற்க இயலாது என நிறுவனம் தெரிவிக்குமானால், அத்தகைய பொறுப்புறுதி ஏற்பின்மையானது, நீதிமன்றத்தில் வழக்காக, அவ்வாறு தெரிவிக்கப்பட்ட 12 காலண்டர் மாதங்களுக்குள் அக்கோரிக்கை பதிவு செய்யப்படவில்லை எனில், அனைத்து நோக்கங்களுக்கும் அக்கோரிக்கையானது கைவிடப்பட்டுவிட்டது என்றே கருதப்படும் மற்றும் அதற்குப் பிறகு ஒருபோதும் கேட்டுப்பெற இயலாததாக ஆகிவிடும்.

பின்குறிப்பு: பிரிமியத் தொகைக்கான காசோலையானது, பணமின்றி அல்லது வேறு எந்த காரணங்களுக்காக திரும்ப அனுப்பப்படுமானால், அப்பாலிசியானது, தொடக்கத்திலிருந்தே தானியக்கத் செயலாக ரத்து செய்யப்பட்டுவிடும்.